DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 255/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **முத்துபாண்டி** |
| Father's Name | : | **கர்ணன்** |
| Village | : | **கல்லுப்பட்டி** |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 3,6,7,9 ஆஜர். 1, 2, 4, 5, 8, 10, 11 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4, 5, 8, 10, 11 எதிரிகள் சார்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 28.07.2025

முதல் விசாரணை:

நான் தற்போது சிவகங்கை காளவாசலில் குடியிக்கிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் கல்லுப்பட்டியில் குடியிருந்தேன். சாட்சி ராஜாராம் என்பவரை தெரியும் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 01.11.2011 ம் தேதி கண்டிசன் பெயிலில் சிப்காட் காவல்நிலையத்தில் கையொப்பம் போடுவதற்காக நானும், முத்துப்பாண்டி, முத்துராஜா ஆகியோர்கள் புல்லட் பைக்கில் சென்றோம். அ.சா.1 முத்துராஜா பைக்கை ஓட்ட நானும் முத்துப்பாண்டியும் பின்னால் உட்கார்ந்திருந்தோம். காட்டுர் மற்றும் உருளி விலக்கிற்கு இடையே நாங்கள் பைக்கில் வந்தபோது காலை 9.45 மணியளவில் எங்களுக்கு பின்னால் வந்த

பொலிரோ வாகனத்தில் வந்த முத்துப்பாண்டி, அழகுசுந்தரம், முத்துசாமி, செல்லப்பாண்டி, பசுபதி, கருப்பு, பாண்டி, பாலமுருகன், அங்குவிஜயன், செல்லம், வைரமணி ஆகியோர் நாங்கள் வந்த மோட்டார் சைக்கிளின் பின்பகுதியில் மோதினார்கள். மேலும் ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு நபர்களும் வந்தார்கள்.போலிரோ வாகனம் மோதியதில் நாங்கள் மூவரும் கீழே விழுந்துவிட்டோம். போலிரோ வாகனத்தில் வந்தவர்கள் எங்களை விரட்டினார்கள். நா'ங்கள் ஓடினோம்.

2. என்னை எதிரிகள் முத்துப்பாண்டி, அழகுசுந்தரம், செல்லம் ஆகியோர் என்னை அருவாளால் வெட்டினார்கள். எதிரி முத்துப்பாண்டி என்னை அருவாளால் இடது மார்பில் வெட்டினார். எதிரி அழகுசுந்தரம் எனது இடது கை மணிக்கட்டு சுண்டுவிரலில் வெட்டினார். எதிரி செல்லம் அருவாளால் எனது இடது காலில் வெட்டினார் நான் மயக்கம் ஆகிவிட்டேன். என்னுடன் வந்த ராஜாராமையும் எதிரிகள் வெட்ட விரட்டி ஓடினார்கள். நான் மயக்கமாகிவிட்டதால் அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. ரோட்டில் சென்றவர்கள் சம்பவத்தை பார்த்து சிப்காட் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்கள். சிப்காட் போலிசார் வந்து ஆம்புலன்சு மூலமான காயம்பட்ட எங்களை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனையில் எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் போதுமான சிகிச்சை இல்லாததால் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் காயம்பட்ட நானும், ராஜாராமனும் ஆகியோர் அனுமதிக்கப்பட்டார்கள். அ.சா.1 முத்துராஜாவிற்கு லேசான காயம் என்பதால் அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுக்கவில்லை. வெளிநோயாளியாக மட்டும் சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

3. சம்பவம் நடந்த அன்றே சிப்காட் போலிசார் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் வந்து என்னை விசாரித்தார்கள். சம்பவத்தில் எதிரிகள் என்னை வெட்ட பயன்படுத்திய அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள்கள் சம்பவத்தில் எதிரிகள் அழகுசுந்தரம், முத்துப்பாண்டி, செல்லம் ஆகியோர்கள் என்னை வெட்ட பயன்படுத்திய அருவாள்கள் ஆகும். அந்த **அருவாள்கள் அ.த.பொ.சா 1 மற்றும் 2** ஆகும். சம்பவத்தில் என்னை தாக்க பயன்படுத்திய பட்டா கத்தி தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான் அந்த பட்டாக்கத்தி ஏற்கனவே அ.த.பொ.சா.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 231(2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.07.28 11:31:24 +0000

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**